**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**
இந்தியா வானிலை ஆய்வு துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 20-09-2022**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-09-20 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-09-21 | 2022-09-22 | 2022-09-23 | 2022-09-24 | 2022-09-25 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 3.0 | 4.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 36.0 | 36.0 | 36.0 | 36.0 | 35.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 27.0 | 27.0 | 27.0 | 27.0 | 27.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 55 | 55 | 55 | 55 | 60 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 10.0 | 10.0 | 12.0 | 12.0 | 8.0 |
| காற்றின் திசை (கோணம்) | 270 | 270 | 270 | 290 | 200 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 4 | 6 | 6 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

செப்டம்பர் 24 முதல் 25 வரை இலேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 35°C - 36°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 27°C ஆகவும் இருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு பொதுவான மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 8 - 12 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

நெல் நடவு செய்யவுள்ள விவசாயிகள் நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறையை சரி செய்து நல்ல மகசூல் பெற ஏக்கருக்கு 10 கிலோ நெல் நுண்ணூட்டக்கலவையை தொழு உரத்துடன் ஊட்டமேற்றி அடியுரமாக இடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## குறுஞ்செய்தி :

நெல் நடவு செய்ய நிலத்தை தயார் செய்யும் போது ஏட் கருக்கு 5 டன் தொழு உரம் இடவும்,

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பாசிப்பயறு | தற்போது நிலவும் பருவ சூழ்நிலையில் புரட்டாசிபட்டத்தில் பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிக மகசூல் கொடுக்ககூடிய உளுந்துரகம் வம்பன் 8 மற்றும் வம்பன் 10 மற்றும் பச்சைபயிறு வம்பன் 3 மற்றும் 4 ஆகிய இரங்களை தேர்வு செய்து விதைக்கவும். விதை க்கும் முன் உளுந்தில் வேர் அழுகல் நோய் வராமல் தடுக்க விதையை டிரைகோடெர்மாவிரிடி 4 கிராம்/கிலோ (அ) சூடோமோனாஸ் 10 கிராம்/கிலோ என்ற அளவில் விதை நேர்த்தி செய்யலாம். |
| நெல் | மானாவாரி விவசாயிகள் நெல் சாகுபடியை மேற்கொள்ளும் பட்சத்தில் வறட்சியை தாங்கி வளரும் அண்ணா 4, Co 51, ADT 45 மற்றும் CO53 போன்ற ரகங்களை விதைத்து பயன்பெறலாம். |
| நெல் | மானாவாரி விவசாயிகள் தரமான விதைகளை விதைப்பதற்கு ஒரு நாள் முன்பு ஒரு சதவிகித பொட்டாசியம் குளோரைடு கரைசலில் 6 மணி நேரம் ஊற வைத்து பின் நிழலில் 16 மணி நேரம் உலரவிட்டு விதைப்பை மேற்கொள்ளும் பொழுது விதை கடினத் தன்மையுடன் போதுமான ஈரம் மண்ணில் கிடைத்த பின்பு முளைத்து வளரும் தன்மையை பெறும் இவ்விதை கடினப்படுத்துதல் நேர்த்தி மூலம் சீரான முளைப்புத் திறனையும், வளர்ச்சியையும் இளம் நாற்றுக்கள் பெறுவதோடு வீரிய நாற்றுகளாக உருவெடுக்கும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தக்காளி | கடந்த வாரம் ஒரு சில இடங்களில் தொடர்ந்து மழை பெய்த காரணத்தால் தக்காளியில் வேரழுகல் நோய் அதிக அளவில் காணப்படுகிறது. இதனை கட்டுப்படுத்த காப்பர் ஆக்சிகுளோரைடு என்ற மருந்தை 1 லிட்டர் தண்ணீருக்கு 25 கிராம் வீதம் கலந்து ஊற்ற வேண்டும். |